**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண். 5/2019**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தாமோதரன் | மதம் | : இந்து |
| த/பெ | : பெருமாள் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 75 | கிராமம் | : அண்ணா நகர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : சென்னை |

**14.11.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

10. என் மகள் கௌதமிக்காக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது மகள் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் வழக்கு ஆவணங்களை படித்து தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி நீலமேகம்தான் என் மகள் கௌதமிக்கு விற்பனை செய்தவர் என்றால் ஆமாம். நீலமேகத்தை எதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சேர்க்கவில்லை. பிராது பத்தி 6ல் முனுசாமி ரெட்டியும் அவர் குடும்ப உறுப்பினர்களும் கூர்ச்சீட்டின் மூலம் குடும்ப சொத்துக்களை பிரித்து கொண்டதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அந்த கூர்ச்சீட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் எங்களுக்கு கொடுக்கவில்லை. அந்த கூர்ச்சீட்டை வாங்கி படித்து பார்த்தோமா என்றால் அவர்கள் கொடுக்கவேயில்லை. எனவே படிக்கவில்லை. வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டதாகதான் சொன்னார்கள்.

11. போக முனுசாமி ரெட்டியின் மனைவி பெயர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. ஆவணத்தில் அவர் பெயர் பார்த்தேன். போக முனுசாமி ரெட்டிக்கு எத்தனை பெண் குழந்தைகள் என்றால் எனக்கு தெரிந்து 2 பெண் குழந்தைகள். போக முனுசாமி ரெட்டியின் பெண் குழந்தைகளுக்கு என்ன சொத்து கொடுத்தார்கள் என்பது தெரியுமா என்றால் இந்த வழக்கு தொடர்பாக நான் ஆவணங்கள் தேடும்போது 1987ல் போக முனுசாமி ரெட்டியின் 5 மகன்களில் ஒருவரான கிருஷ்ணமூர்த்தி தனக்கு வந்த

பாக சொத்துக்களை தனது அக்கா வீட்டுக்காரரான நீலகண்டனுக்கு கிரையம் கொடுத்துள்ளார். போக முனுசாமி ரெட்டியின் பெண் குழந்தைகளுக்கு என்ன சொத்து கொடுத்தார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. கிருஷ்ணமூர்த்தி தனக்கு வந்த பாக சொத்துக்களை தனது அக்கா வீட்டுக்காரரான நீலகண்டனுக்கு கிரையம் கொடுத்தாக சொல்வதில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அ.வ.எண்.107/2011 வழக்கில் தாக்கல் செய்து எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்பது ஞாபகமில்லை.

12. பிராது பத்தி 6ல் கணேச ரெட்டிக்கு புல எண்60/1, 60/2, 60/8 ஆகிய சொத்துக்களை ஒதுக்கியதாக சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால் கணேச ரெட்டி அவரது மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்து அவரது மகன் விற்றுள்ளார். அதைதான் நாங்கள் வாங்கியுள்ளோம். அவர்கள் தங்களுக்குள் பாகம் ஆனதாக நாங்கள் 2008ல் கிரையம் வாங்கும்போது என்னிடம் சொன்னார்கள். கணேச ரெட்டி அவரது மகன் நீலமேகத்திற்கு 11.04.2007ல் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் படித்து பார்த்தேன். அந்த ஆவணத்தை ரத்து செய்துள்ளார்கள். ரத்து ஆவணத்திற்கு முன்பு எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி பார்த்தேனா என்றால் இல்லை. கணேச ரெட்டி அவரது மகன் நீலமேகத்திற்கு 2வதாக எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தில் எங்காவது 1987ல் பாகம் செய்து கொண்டதாக எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

13. 2வதாக எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில்தான் நீலமேகம் விற்பனை செய்தார் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் வாங்கிய தேதியில் பட்டா எண்.512ல் போக முனுசாமி ரெட்டி பெயரில்தான் பட்டா இருந்தது என்றால் அதை பார்க்கவில்லை. எனக்கு தற்போது ஞாபகமில்லை. வழக்கு சொத்திற்கு பட்டா மாற்றும்போது போக முனுசாமி ரெட்டியின் மற்ற வாரிசுகளை அழைத்து விசாரணை செய்து எங்கள் பெயருக்கு பட்டா மாற்றப்பட்டதா என்றால் இல்லை. நாங்கள் கிரையம் வாங்கும்போது திருவாலங்காடு கூட்டுறவு வங்கியில் சொத்துக்கள் அடமானத்தில் இருந்தது என்றால் தெரியவில்லை. **(சாட்சி தற்போது பின்வருமாறு கூறுகிறார்)** எங்களிடம் முன்பணமாக பெற்று அந்த கடனை சரி செய்தார்கள். கடன் கட்டியதற்கான கடன் ரத்து ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்

செய்துள்ளேன்.

14. போக முனுசாமியின் மொத்த வாரிசுகளும் சேர்ந்துதான் கடன் வாங்கினார்கள் என்றால் முருகப்ப ரெட்டி பெயரில் கடன் வாங்கினார்கள். **(சாட்சி தற்போது பின்வருமாறு கூறுகிறார்)** முனுசாமி ரெட்டி பெயரில் கடன் வாங்கினார்கள். அவர் எந்த வருடம் கடன் வாங்கினார் என்றால் 1987ல் கடன் வாங்கினார். பிராது பத்தி 11ல் 2 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்தில் தகராறு செய்ய முயற்சித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. **(பிராதில் attempt செய்ய முயற்சித்ததாக குறிப்பிட்டிருப்பதாகவும் பிரதிவாதி வழக்கறிஞர் அதை மாற்றி கேள்வி கேட்பதாகவும் கூறி வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது)**

15. பிராது பத்தி 11ல் கணேச ரெட்டிக்கு குடும்ப ஏற்பாட்டில் (கூர்ச்சீட்டு) வந்ததாக கூறியுள்ளோம் என்றால் **(பிராது சாட்சியிடம் படிக்க கொடுக்கப்பட்டது)** கூர்ச்சீட்டு என சொல்லப்பட்டுள்ளது. அத்துமீறி நுழைய முயற்சி செய்தபோது நான் என்ன செய்தேன் என்றால் நான் 2008லேயே பட்டா, சிட்டா எங்கள் பெயருக்கு மாற்றிவிட்டோம். மாற்றி அனுபவித்து வந்தோம். அவர்கள் உழுக வந்தார்கள். நாங்கள் தடுத்து நிறுத்தினோம். அவர்கள் உழுக வந்தபோது என்ன சொன்னார்கள் என்றால் பக்கத்தில் அவர்கள் இடம் இருப்பதாகவும் புதியதாக டிராக்டர் வாங்கியதால் உழுது பார்க்க வந்ததாகவும் பக்கத்தில் தங்கள் நிலம் இருப்பதாகவும் தவறுதலாக உழுதுவிட்டதாகவும் சொன்னார்கள். வழக்கு நிலுவையில் இருக்கும்போது எப்படி உழ முடியும் என கேட்டோம். சென்றுவிட்டார்கள். வழக்கு நிலுவையில் இருக்கும்போது எப்படி உழ முடியும் என்று கேட்டேனா என்றால் ஆமாம். அவர் சென்றுவிட்டார். நாங்களும் வந்துவிட்டோம்.

16. இந்த வழக்கின் 2 முதல் 4 பிரதிவாதிகள் அ.வ.எண்.107/2011 வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி தாவா சொத்து அவர்களுக்கு சொந்தமானது என எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அ.வ.எண்.107/2011 வழக்கு தாக்கல் செய்த பின்பு அந்த சொத்து தொடர்பாக வில்லங்க சான்று எப்போது எடுத்து பார்த்தேன் என்றால் 2011– 2012ல் பார்த்தேன். 2011ல் வில்லங்கம் பார்த்தபோது மாணிக்கம், துளசிராமன், பாபு பெயரில் செட்டில்மெண்ட் இருந்த விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம். அவ்வாறு செட்டில்மெண்ட் செய்த பின்பு மாணிக்கம், துளசிராமன், பாபு ஆகியோரை பார்த்து ஏன் செட்டில்மெண்ட்

எழுதினீர்கள் என்று கேட்டேனா என்றால் அவர்களிடம் கேட்கவில்லை. அவர்கள் தவறுதலாக பத்திரம் போட்டுள்ளார்கள் என மாவட்ட பதிவாளரிடம் புகார் கொடுத்தேன்.

17. மாவட்ட பதிவாளர் விசாரணை செய்து ஏதேனும் நடவடிக்கை எடுத்தாரா என்றால் தேதி சரியாக ஞாபகமில்லை. ஆனால் விசாரணைக்கு இருதரப்பிலும் ஆஜரானோம். இதற்கிடையில் மதுரை உயர்நீதிமன்றத்தில் மாவட்ட பதிவாளர் ரத்து செய்ததற்கு எதிராக தடை உத்தரவு வந்ததால் அந்த விசாரணை அப்படியே நிறுத்தப்பட்டுவிட்டது. அங்கு முடியாததால்தான் இங்கு வழக்கை தாக்கல் செய்துவிட்டோம் என்றால் மாவட்ட பதிவாளர் நீதிமன்றத்திற்கு போக சொல்லிவிட்டார். எனவே இந்த வழக்கை தாக்கல் செய்தேன். தற்போது சொல்லும் இந்த விவரத்தை எங்களது பிராதிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். துளசிராமன், பாபுவிற்கு மாணிக்கம் என்ன விஸ்தீரணத்திற்கு செட்டில்மெண்ட் எழுதியுள்ளார் என்றால் 60/2ல் 40 செண்ட்டும், 60/8ல் 23 செண்ட்டும் எழுதியுள்ளார். அந்த ஆவணத்திலேயே வாய்மொழியாக கிடைத்த சொத்தை என் மகன்களுக்கு எழுதுகிறேன் என்றுதான் சொல்லியுள்ளார்.

18. அந்த இரண்டு புல எண்கள் தவிர வேறு சொத்துக்களும் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ளது என்றால் ஆமாம். துளசிராமன், பாபுவிற்கு மாணிக்கம் எழுதி வைத்த செட்டில்மெண்ட்டை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதை ரத்து செய்யதான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மாணிக்கம் தனது பிள்ளைகளுக்கு பாதிப்பாதியாக சொத்துக்களை பிரித்து எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். வா.சா.ஆ 7ல் புல எண்.60/2ல் என்ன விஸ்தீரணம் காட்டப்பட்டுள்ளது என்றால் 40 செண்டில் 12 செண்ட் ஆகும். வா.சா.ஆ 7ல் புல எண்.60/2ல் என்ன விஸ்தீரணம் காட்டப்பட்டுள்ளது என்றால் 40 செண்டில் 12 செண்ட் ஆகும். வா.சா.ஆ 7, வா.சா.ஆ 8ன்படி புல எண்.60/2ல் 40 செண்டில் 12 + 12 மொத்தம் 24 செண்டிற்குதான் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம்.

19. வா.சா.ஆ 8 ஆவணத்தில் 60/2ல் மொத்தம் 40 செண்டில் என் பாகம் 25 செண்ட் என குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 6 வில்லங்க சான்று எந்த தேதிக்குரியது என்றால் 26.07.2013 ஆகும். 26.07.2013 தேதியிட்ட வா.சா.ஆ 6 வில்லங்க சான்றில் 3, 4 பிரதிவாதிகளுக்கு 2ம் பிரதிவாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால்

ஆமாம். அதற்குதான் மாவட்ட பதிவாளரிடம் நடவடிக்கை எடுத்தேன். 26.07.2013 தேதியிட்டு விவரம் தெரிய வந்து 6 வருடம் கழித்து 2019ல்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். ஒரு ஆவணத்தை செல்லாது என ஆவணம் பற்றி தெரிய வந்த 3 வருடத்திற்குள் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றாலும் கால வரையறை தாண்டி தாக்கல் செய்துள்ள எனது வழக்கு செல்லாது என்றாலும் சரியல்ல. காலவரையறைக்குள்ளேதான் உள்ளது.

20. தாவா சொத்து என் மகள் கௌதமிக்கு தான் சொந்தம் என விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் அதற்குதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கில் பிரதிவாதிகள்தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் படித்து பார்க்கவில்லை. புல எண்.60/2ல் 25 செண்ட்டும், 60/3ல் 13 செண்ட், 60/8ல் 23 செண்ட், 60/12ல் 3 செண்ட் கிணறு, மின் மோட்டார் உள்ளிட்டவற்றில் 5ல் ஒரு பாகம் 2ம் பிரதிவாதி பாகத்திற்கு வந்து அவர் தன் பாகத்தை தனது மகன்களான 3, 4 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்துவிட்டார் என்றால் புல எண்.60/2, 60/8 ஆகியவை எங்களுக்கு சொந்தமானதாகும். புல எண்.60/2ல் 25 செண்ட் போக மீதியுள்ள 15 செண்ட்தான் எங்களுக்கு பாத்தியமானது என்றாலும் நாங்கள் தவறுதலாக முழு விஸ்தீரணத்தையும் வாங்கியுள்ளோம் என்றால் நாங்கள் 2008ல் கிரையம் வாங்கி பட்டா மாற்றி அனுபவித்து வருகிறோம். அவர்கள் 2010ல்தான் ஆவணங்களை எழுதியுள்ளார்கள்.

21. 2ம் பிரதிவாதி தனது பாக சொத்துக்களை 3, 4 பிரதிவாதிகளுக்கு 16.09.2010ம் தேதியிட்டு எழுதி கொடுத்துவிட்டார் என்றாலும் அது முதல் 3, 4 பிரதிவாதிகள்தான் அந்த சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது தவறு. அதற்கு முன்பே நாங்கள் பட்டா மாற்றி அனுபவித்து வருகிறோம். கணேச ரெட்டிக்கு 60/3, 60/9 சொத்து மட்டும்தான் பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்றாலும் அதைதான் அவர் தனது மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றாலும் தவறு. கணேச ரெட்டி புல எண்.60/2, 60/8ஐ பொறுத்து அவரது மகனுக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமே செல்லாது என்றாலும் அந்த சொத்துக்கள் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. நீலமேகம் எங்களுக்கு எழுதி கொடுத்த கிரையம் ஆவணம் அவருக்கு உரிமையே இல்லாமல் எழுதி கொடுத்த ஆவணம் என்பதால் சட்டப்படி செல்லாது என்றால் தவறு.

பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்தை தவறுதலாக கிரையம் பெற்று பட்டா மாற்றியுள்ளோம் என்றாலும் எங்கள் கிரையம் செல்லாது என்றாலும் சரியல்ல.

22. நானோ என் மகளோ எந்த காலத்திலும் வழக்கு சொத்தில் பூமியில் உண்மை அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். என் மகள் அமெரிக்காவில் உள்ளார் என்றால் ஆமாம். எந்த வருடம் என் மகள் அதிகார முகவர் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் 2018 ஆகும். 2019ல் இந்த வழக்கை அதிகார முகவராக நான் தாக்கல் செய்யவில்லை என்றால் என் மகள்தான் கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளார். என் மகள் அதிகார முகவர் ஆவணம் எழுதி கொடுத்த பின்பு நான் தாக்கல் செய்யாமல் என் மகள்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பொது அதிகாரம் கொடுத்த பின்பு அதை மறைத்து என் மகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல.

23. வா.சா.ஆ 10 பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்யாமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் 2, 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் எங்களுக்கு பாத்தியமே இல்லை என்றாலும் காலவரையறை முடிந்து தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி செல்லாது என்றாலும் தவறு. புல எண்.60/2, 60/8 ஆகியவை 3, 4 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி சொந்தமான சொத்துக்கள் என்றாலும் அவர்களது அனுபவத்தில் இருக்கும் சொத்துக்கள் என்றாலும் தவறு. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது)

**5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

24. ராமமூர்த்தி டில்லிபாபுவிற்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் 2013 வில்லங்க சான்றின்போது தெரியும். 2013லேயே ராமமூர்த்தி டில்லிபாபுவிற்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி தெரிந்த பின்பு 6 வருடம் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. புல எண்.60/1 இன்றுவரை டில்லிபாபு அனுபவத்தில் உள்ளது என்றால் தவறு. வரி

நாங்கள்தான் செலுத்தி வருகிறோம். மற்ற பாகஸ்தர்களுக்கு தெரியாமல் மோசடியாக நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம் என்றாலும் எங்கள் கிரையம் சட்டப்படி செல்லாது என்றாலும் தவறு. எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)